சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு! விஜயின் ரசிகைக்கே பாதுகாப்பில்லை!

# பாலியல் குற்றவாளிக்குத் துணைபோகும் த.வெ.க. அரசு!

## முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் பேட்டி!



தூத்துக்குடி, ஜூன் 13 - பாலியல் குற்றவாளிக்கு துணை போகும் தவெக அரசு என்றும் விஜயின் ரசிகைக்கே பாதுகாப்பு இல்லை என்றும் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு, அச்சத்தில் பெண்கள் என்றும், அப்போது CM சார்.. CM சார் என கூவிவிட்டு, இப்போது மட்டும் தனிமனித ஒழுக்கம் என கூறி தப்பித்துக் கொள்ள நினைக்கிறார் முதல்வர் விஜய் என்றும் முன்னாள் அமைச்சர் திருமதி கீதா ஜீவன் செய்தியாளர்கள் சந்திப்பில் காட்டமாக கூறியுள்ளார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் நேற்று முன்தினம் (11.06.2026) பத்திரிகையாளர்களை சந்தித்து தவெக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பே இல்லாத சூழல் நிலவி வருவதையும், சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு பற்றியும் எடுத்துரைத்தார்.

அவர் பேசுகையில் “கடந்த தி.மு.க. ஆட்சியில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் முழுவதும் பெண் காவலர்கள் அடங்கிய பிங் பேட்ரோலை தொடங்கினார் முன்னாள் முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள். இப்போது அதற்கு ஒரு ஸ்டிக்கர் ஒட்டி சிங்கப் பெண் அதிரடிப்படை என தொடங்கி உள்ளது இந்த புதிய அரசு.

ஆடியோ லாஞ்ச் போல விளம்பரம் செய்வதில் மட்டும் குறியாக இருக்கும் இந்த அரசு நிஜத்தில் எந்த பாதுகாப்பையும் உறுதி செய்யவில்லை. ஒரு பக்கம் சிங்க பெண் படையை தொடங்கி வசனம் பேசுவது மறுபக்கம் பெண்களுக்கு எதிராக குற்றம் புரிந்தவர்களுக்கே ஆதரவாக இருப்பது.

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே , முதல்வர் விஜயின் தீவிர ரசிகை ஒருவரை தூத்துக்குடி தவெக நிர்வாகிகள் பாலமுருகன், ஜெயபால் ஆகியோர் ஸ்ரீவைகுண்டம் தவெக எம்.எல்.ஏ வி.ஜி. சரவணன் மூலம், அரசு வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றி அழைத்துச் சென்று, கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். அதுபற்றி புகார் அளித்த அந்த பெண்ணையே புகாரை வாபஸ் பெற சொல்லி கொலை மிரட்டல் விடுத்துள்ளார் த.வெ.க. எம்.எல்.ஏ. சரவணன்.

அந்த அப்பாவி பெண் பத்து நாட்களாக நியாயம் வேண்டி கதறி அழுது கொண்டிருப்பது முதல்வர் விஜயின் காதுக்கு கேட்கவில்லையா..? என கேள்வி எழுப்பினார்”.

மேலும் “ விஜய் முதலமைச்சராவதற்கு உழைத்த ஒரு பெண் தனக்கு நேர்ந்த கொடுமைக்கு நியாயம் கிடைக்காமல் பொது வெளியில் வந்து அழுது புலம்புவதைக் கூட முதல்வர் விஜய் பொருட்படுத்தவில்லை. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

குற்றத்துக்கு துணை போயுள்ள அந்த எம்.எல்.ஏ மீது எந்த விசாரணையும் நடத்தவில்லை. சிங்கப்பெண் திட்டத்தை புரோமோசன் செய்வதிலும் , பொய்யான தகவல்களை பரப்புவதிலுமே தீவிரமாக உள்ளதே தவிர பெண்களின் பாதுகாப்பு பற்றி எல்லாம் அக்கறையே இல்லை.” என கடுமையாக சாடினார்.

**தனி மனித ஒழுக்கம் எனக் கூறி தப்பித்துக் கொள்கிறார்!**

அதோடு “ தேர்தலுக்கு முன்பு எதற்கெடுத்தாலும் CM சார்.. CM சார் என கூவி விட்டு... இப்போது மட்டும் தனிமனித ஒழுக்கம் சமூக ஒழுக்கம் என கூறி தப்பித்துக் கொள்ள நினைக்கிறாரா முதல்வர் விஜய்... நடக்கும் குற்றங்களை தடுக்க அரசுக்கு பொறுப்பு இல்லையா.?

கடந்த கழக ஆட்சியில் அப்போதைய முதல மைச்சர் கழகத்தலைவர் அவர்கள் பெண்களுக்கு ஆதரவாக இருந்து பெண்களுக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்து அதே போல பாதுகாப்பை உறுதி செய்தார். அதனால் தான் பெண்கள் தைரியமாக வெளியே வந்து புகார் அளிக்கும் சூழல் நிலவியது.

ஆனால் இன்று புகார் அளித்த பெண்ணையே ஒரு ஆளும் கட்சி எம்.எல்.ஏ பகிரங்கமாக மிரட்டுவதும் அப்படி மிரட்டும் எம்.எல்.ஏ மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இந்த அரசு குற்றவாளிக்கு துணையாக இருப்பதும் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கி உள்ளது. ஆளும்கட்சியை சேர்ந்த பெண்ணுக்கே இந்த நிலைமை என்றால் சாதாரண பெண்கள் எப்படி இனி தைரியமாக வந்து புகார் அளிப்பார்கள்.?

அதே போல “ த.வெ.க.வினர் அட்ராசிட்டி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. கடைகளுக்கு சென்று மிரட்டி மாமூல் கேட்பது, பள்ளி தலைமை ஆசிரியரை மிரட்டுவது , பொது மக்களை மிரட்டுவது என அத்துமீறி நடந்து கொண்டுள்ளனர். மொத்தத்தில் இந்த புதிய ஆட்சியில் சட்ட ஒழுங்கு சந்தி சிரிக்கிறது.” என கடுமையாக விமர்சித்தார்.

**ஊடகங்களை முடக்குகின்றனர்!**

மேலும் “இது அத்தனையையும் கண்டும் காணாமல் முதல்வர் விஜய் இருக்கிறார். அரசின் குறைகளை சுட்டிக்காட்டும் ஊடங்களை முடக்குகின்றனர். ஆளும்கட்சியினர் இப்படி அதிகார அத்துமீறலில் ஈடுபட்டு பொது மக்களுக்கு எதிராக செயல்படுவதை, எதிர்த்து மக்களுக்கு ஆதரவாக கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் திமுக போராடும். எங்களின் எதிர்க்கட்சி தலைவர் சட்டமன்றத்தில் மக்களின் குரலை எதிரொலித்து நீதியை நிலைநாட்டுவார்” என்றார். இறுதியாக பேசுகையில் “இந்த அரசு சுயமாக எதையும் செய்யாமல் திமுக செய்த சாதனைகளுக்கு எல்லாம் ஸ்டிக்கர் ஒட்டி தங்களது என பொய் செய்தியை பரப்பி வருகிறது.

சமீபத்தில், முதல்வர் படம் இல்லாமல் ஸ்கூல் பேக் வழங்குவது கடந்த திமுக ஆட்சியில் இருந்து நடைபெற்று வருவது அதைக் கூட மறைத்து தற்போதைய ஆட்சி தான் செய்ததாக பொய்யைப் பரப்பி மக்களை ஏமாற்ற நினைத்தனர். இப்படி மக்களை ஏமாற்றுவதை மட்டுமே முழு நேர வேலையாக கொண்டுள்ளது இந்த அரசு” என்பதையும் குறிப்பிட்டார்.

# அரசுப் பேருந்து ஓட்டுநர் மீது தாக்குதல் நடத்திய த.வெ.க. நிர்வாகி கைது!

மதுரை, ஜூன் 13 - சோழவந்தான் அருகே அரசு பேருந்து ஓட்டுநரை பட்டா கத்தியால் வெட்டிய த.வெ.க. நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார்.

பணிமனைக்கு திரும்பி கொண்டிருந்த அரசு பேருந்துக்கு வழிவிடாமல் தகராறில் ஈடுபட்ட த.வெ.க. நிர்வாகி தனுஷ்கோடி பட்டா கத்தியால் ஓட்டுநர் பிரசாந்தை தலையில் வெட்டிவிட்டு தப்பியோடினார்.

இந்நிலையில், இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தனுஷ்கோடியை உடனே கைது செய்ய வலியுறுத்தி சோழவந்தான் அரசு பேருந்து பணிமனையில் 300க்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள், நடத்துநர்கள், பணிமனை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக சோழவந்தான் பணிமனையில் 55 அரசு பேருந்துகள் இயங்காமல் நிறுத்தப்பட்டன. பணிக்குச் செல்வோர் உள்ளிட்ட பொது மக்கள் பாதிக்கப்பட்டனர்.

அரசு போக்குவரத்து கழக மேலாளர்கள், போலீஸ் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். ஓட்டுநரை தாக்கிய தனுஷ்கோடி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் உறுதியளித்தனர்.

இதைத் தொடர்ந்து சோழவந்தான் போலீசார் வழக்கு பதிந்து தலைமறைவாக இருந்த தனுஷ்கோடியை தீவிரமாக தேடி வந்தனர்.

இதனிடையே கருப்பட்டி கிராமம் அருகே உள்ள தோட்டத்தில் தனுஷ்கோடி பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று தவெக நிர்வாகி தனுஷ்கோடியை கைது செய்தனர்.

ஏற்கெனவே தனுஷ்கோடி மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும், குண்டர் சட்டத்தில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தற்போது தனுஷ்கோடியை போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி மதுரை மத்திய சிறையில் தனுஷ்கோடியை அடைத்தனர்.




தமிழினத் தலைவர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் ஏ.எம். உசேன் ஏற்பாட்டில் தெலுங்குபாளையம் பகுதி, 79வது வட்டக் கழகத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்–புக், பேனா, பென்சில், குடைகளை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். இதில் பகுதிச் செயலாளர் ராஜ்குமார், வார்டு மாமன்ற உறுப்பினர் வசந்தாமணி, வட்டச் செயலாளர்கள் இப்ராஹிம், சிவகணேஷ், வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.கே.வேலுச்சாமி மற்றும் பழனிச்சாமி, விஜி உள்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர்

# கலைஞர் 103வது பிறந்தநாள் விழா - தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. அறிவிப்பு!



நீலகிரி, ஜூன் 13- நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு, நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒன்றிய - நகர பேரூர் கழக பகுதிகளில் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தலைமை கழக சொற்பொழிவாளர்கள் சிறப்புரையாற்ற நடைபெற உள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

நாள் - நிகழ்ச்சிகள் ஏற்பாடு - தலைமை கழக சொற்பொழிவாளர்கள் விவரம் வருமாறு:

14.6.2026 - கீழ்கோத்தகிரி ஒன்றியம் - முரசொலி மா.வெங்கடேஷ், பந்தலூர் மத்திய ஒன்றியம், நடுவட்டம் பேரூராட்சி - மு.பாண்டியராஜ்,

15.6.2026 - சோலூர் பேரூராட்சி - எஸ்.ராஜா,

20.6.2026 - உதகை கிழக்கு நகரம் - உடுமலை தண்டபாணி, 21.6.2026 - குன்னூர் நகரம், உலிக்கல் பேரூராட்சி - சிங்கை பிரபாகரன், பந்தலூர் கிழக்கு ஒன்றியம் - எம்.பி.ஆலன்,

23.6.2026 - கோத்தகிரி ஒன்றியம், கோத்தகிரி பேரூர், எழும்பூர் கோபி

24.6.2026 - உதகை மேற்கு நகரம், எழும்பூர் கோபி,

25.6.2026 - உதகை வடக்கு (மேற்கு) ஒன்றியம் - கேத்தி பேரூர் - கோவை துரைமுருகன்,

26.6.2026 - குன்னூர் ஒன்றியம், ஜெகதளா பேரூர், வெலிங்டன் கண்டோன்மென்ட் - சி.எ.கலீம்,

27.6.2026 - கூடலூர் ஒன்றியம்- சேலம் சுஜாதா,

28.6.2026 - உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியம். கீழ்குந்தா பேரூர் - திருப்பூர் கூத்தரசன், நெல்லியாளம் நகரம், பந்தலூர் மேற்கு ஒன்றியம்- சேலம் சுஜாதா, தேவர்சோலை பேரூர், ஓவேலி பேரூர்- மு.பாண்டியராஜ், கூடலூர் நகரம், பிக்கட்டி பேரூர் - கோவை துரைமுருகன்,

29.6.2026 - உதகை தெற்கு (கிழக்கு) - ஒன்றியம் அ.ஜாகீர்உசேன், உதகை வடக்கு (கிழக்கு) ஒன்றியம் - சி.எ.கலீம்,

30.6.2026 - மேலூர் ஒன்றியம், அதிகரட்டி பேரூர்- சிங்கை சௌந்தர்ராஜன்

மேற்கண்ட தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் அனைத்தும் சிறப்புடன் நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அந்தந்த நகர, ஒன்றிய பேரூர்க் கழக செயலாளர்கள் செய்வதோடு, கூட்டங்களில் அந்தந்த நகர, ஒன்றிய, பேரூர் கழகங்களுக்கு உட்பட்ட அனைத்து கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாநகராட்சிப் பள்ளியில் புகுந்து

# மரக்கன்றுகள் வழங்குவது போன்று த.வெ.க.வினர் ‘ரீல்ஸ்’!

## அமைதி காக்கும் பள்ளிக் கல்வித்துறை!

திருப்பூர், ஜூன் 13 - திருப்பூர் மாநகராட்சி, பெரியார் குடியிருப்பு பகுதியில் மாநகராட்சி அரசு நடுநிலைப்பள்ளி உள்ளது. இங்கு மாணவர்களுக்கு சமீபத்தில் தவெகவினர் மரக்கன்றுகள் வழங்குவதாக கூறியுள்ளனர்.

பொதுவாக அரசுப் பள்ளி வளாகங்களுக்குள் அரசியல் கட்சியினர் நுழைவதற்கோ, கட்சி சார்ந்த விளம்பரங்களை மேற்கொள்வதற்கோ பள்ளிக் கல்வித்துறை கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. குறிப்பாக, பள்ளி நேரங்களில் வெளிநபர்களோ அல்லது அரசியல் அமைப்பைச் சேர்ந்தவர்களோ கல்வி அதிகாரிகளின் முறையான அனுமதியின்றி பள்ளி வளாகத்திற்குள் நுழையக்கூடாது என்றும், மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் தனிமனித உரிமை கருதி அவர்களைப் பெற்றோரின் அனுமதியின்றி புகைப்படம் அல்லது வீடியோ எடுக்கக் கூடாது என்றும் அரசு விதிகள் கூறுகின்றன.

மேலும், அரசுப் பள்ளிகளை எவ்வித அரசியல் பரப்புரைக்கோ, விளம்பர நோக்கங்களுக்கோ பயன்படுத்தக் கூடாது என்று விதிகள் உள்ள நிலையில், அதனைப் பொருட்படுத்தாமல் பள்ளிக்குள் நுழைந்த தவெகவினர், அங்குள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைத் தங்களது செல்போனில் புகைப்படம், வீடியோ எடுத்துள்ளனர்.

மரக்கன்று வழங்குவது போலத் தொடங்கிய இந்நிகழ்வை, அப்படியே ஒரு அரசியல் விளம்பரப் படமாக மாற்றியுள்ளனர்.

ஒரே ஒரு செடி வழங்கி மாணவர்களுடன் எடுத்த வீடியோக்களைத் தொகுத்து, பின்னணியில் சினிமா பாடல்களை ஒலிக்க விட்டு, எம்.எல்.ஏ., நிர்வாகிகள் மற்றும் விஜய் ஆகியோரின் புகைப்படங்களுடன் கூடிய அரசியல் போஸ்டரையும் இணைத்து ரீல்ஸ் வீடியோவாக சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட கல்வித்துறை அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி விதிகளை மீறி செயல்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தலைமை : க.செல்வராஜ்! முன்னிலை : டிகேடி மு.நாகராசன் – பி.ஆர்.செந்தில்குமார் – செ.திலகராஜ்! திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில்

# “நவீன தமிழ்நாட்டின் சிற்பி” என்ற தலைப்பில் கருத்தரங்கம்!

## வீரமணி – எஸ்.கே.ஸ்ரீராம் பங்கேற்பு! மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத் அறிக்கை!

திருப்பூர், ஜூன் 13 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது 103வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில் “நவீன தமிழ்நாட்டின் சிற்பி” என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது என்று மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

நாளை (14.06.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் திருப்பூர் மத்திய மாவட்ட கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர், கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட மாணவர் அணி சார்பில் “நவீன தமிழ் நாட்டின் சிற்பி” என்ற தலைப்பில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் மாபெரும் கருத்தரங்கம் மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க. செல்வராஜ் தலைமையில் திருப்பூர் தெற்கு மாநகர கழகச் செயலாளர் டிகேடி மு.நாகராசன், பகுதி கழக பொறுப்பாளர், மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில் குமார், தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இதில் கழக மாணவர் அணி செயலாளர் வீரமணி கலந்து கொள்கிறார். தலைமைக் கழக பேச்சாளர் சென்னை எஸ்.கே.ஸ்ரீராம் கருத்துரை வழங்குகிறார்.

அது சமயம் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மாமன்ற உறுப்பினர்கள், மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளை அதிக அளவில் பங்கேற்க செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து. கோபிநாத் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றியம், சின்னக்கம்பாளையம் பேரூர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற மாபெரும் ரேக்ளா போட்டியினை கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுக் கோப்பைகளை வழங்கினர். இதில் ஒன்றிய கழகச் செயலாளர், ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் எஸ்.வி.செந்தில்குமார், பேரூர்ச் செயலாளர் ரா.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.